பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (31.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 36

# சதாம் ஹூசைன் நேற்று தூக்கில் இடப்பட்டார்!

## ஈராக் சுதந்திர இராச்சியமான பின்னர் சடலத்தை அங்கு புதைக்க மகள் முடிவு

பக்தாத்,டிசெ.31

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன், ஈராக் தலைநகர் பக்தாத்தில் பெயர் குறிப்பிடாத ஓர் இடத்தில் நேற்று உள்ளூர் நேரம் காலை 6மணியளவில் (இலங்கை நேரம் 8.30 மணி) தூக்கிலிடப்பட்டார்.

1982ஆம் ஆண்டு 148 ஷியா முஸ்லிம்கள் கொலைசெய்யப்பட்டமை தொடர்பில் சதாம் குற்றவாளியாக்கப்பட்டு கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி அவருக்கு ஈராக்கிய உயர்நீதிமன்றம் தூக்குத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது. சதாமுடன் அவரது உதவியாளர்களான பர்ஸானா மற்றும் ஈராக்கிய முன்னாள் நீதியரசர் அவாட்ஹமீட் அல்பந்தர் ஆகியோரையும் தூக்கிலிடும்படி நீதிமன்றம் பணித்திருந்தது.

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகள் ஒரு வருடகாலம் இடம் பெற்றிருந்தன.

சதாம் தூக்கிலிடப்படும் வேளையில் வைத்தியர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், மற்றும் அதிகாரிகள் எனப்பலரும் சாட்சிகளாகப் பிரசன்னமாக இருந்தனர்.

**புனித குர் ஆன் வைத்திருந்தார்**

சதாம் தூக்கிலிடப்படுவதவற்கு முன்னர் அவரது கையில் புனித குர் ஆன் காணப்பட்டது என்றும் தூக்கில் இடுவதற்கு அழைத்துச் சென்றபோது அதனை நண்பர்



ஒருவரிடம் அவர் கையளித்தார் எனவும் - ஈராக்கிய தகவல்கள் தெரிவித்தன.

பின்னர் கறுப்பு உறையால் சதாமின் தலை மூடப்பட்டு கழுத்தில் தூக்குக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா தீவிர பங்காற்ற ரவிசங்கர் வற்புறுத்துவார்



## கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தெரிவிப்பு

புதுடில்லி,டிசெம்பர்31

**இலங்கையில் தமிழ்மக்கள் கொல்லப்படுவதை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவருவதில், புதுடில்லி அரசாங்கம் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று வாழுங்கலை நிறுவனத்தின் ஸ்தாபகரான ஆன்மீகத் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி தெரிவித்துள்ளார்.**

**பெங்களூரில் உள்ள அவரது ஆச்சிரமத்தில் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழுவிடம், குருஜி இந்தத் தகவலை வெளியிட்டதாக ஐ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.**

இந்தியா சென்றிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக் குழுவைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, ஏ.பத்மநாதன் ஆகிய மூவரும் பெங்களூர் சென்று ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியை ஒரு மணி நேரம் சந்தித்துப் பேசினர்.

அப்போதே, இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு இந்திய மத்திய அரசு இப்போதுள்ளதை விட தீவிரமாகவும் வேகமாகவும், செயற்பட வேண்டும் என்றும் தாம் வற்புறுத்த உள்ளதாக குருஜி கூறியுள்ளார்.

இந்திய அரசாங்கத்திடம் மட்டுமன்றி உலகின் பெரிய நாடுகளின் தலைவர்களிடமும் தாம் நேரில் சென்று இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்த உள்ளதாகவும் ஸ்ரீஸ்ரீ ரவி

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் கிபிர் தாக்குதல் ஐவர் படுகாயம், வீடு சேதம்

கிளிநொச்சி,டிசெ.31

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிலாவத்தைப் பகுதி மீது நேற்று முற்பகல் 11.45 மணியளவில் கிபிர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் காயமடைந்தனர். வீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

பல தடவைகள் வட்டமிட்ட கிபிர் விமானங்கள் அடுத்தடுத்து குண்டுகளை வீசின. முல்லைத்தீவு மாவட்ட ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வீட்டின் மீது குண்டு ஒன்று விழ்ந்து வெடித்ததில் வீடு முற்றாகச் சேதமடைந்தது.

அந்த வீட்டுக்கு அருகில் அமைந்திருந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் பொலிஸார் மரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ.31

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய விடுதியில் தங்கியிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் உயிரிழந்தார்.

நீர் கொழும்பைச் சேர்ந்த சிசில் குமார (வயது 42) என்ற பொலிஸாரே உயிரிழந்தவராவார்.

யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் நேற்று விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் தமது துப்பாக்கியை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்றும் -

அச்சமயம் துப்பாக்கி தவறுதலாக வெடித்தது என்றும் - விசாரணையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகாமத்தில் ஊர்காவலர் சுட்டுக்கொலை

திருகோணமலை,டிசெ.31

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம், ஜெயந்திபுரம் பகுதியில் நேற்றுக்காலை ஊர்காவலர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஜீ.கே.புஞ்சி பண்டா (வயது 36) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் இருந்த வேளை அங்கு சென்ற இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுவிட்டு, அவரது சீருடை, ரி 56 துப்பாக்கி ஆகியவற்றை அபகரித்துக் கொண்டு தப்பிவிட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (1-151)

**2007 ஆம் ஆண்டுக்கான உதயன் நாள்காட்டி நாளைய பத்திரிகையுடன் இணைக்கப்படும்.**

## வாகரை நோக்கி விமான,ஷெல் தாக்குதல்கள்!

மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு வாகரைப் பகுதி மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

கல்லாறு, கரடிக்குளம், வாழைச்சேனை ஆகிய படைமுகாம்களில் இருந்து வாகரை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (அ-1)

## யாழ். பல்கலை கல்விச் செயற்பாடுகளை ஜன.22 இல் ஆரம்பிக்கப் பேரவை முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ். பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை அடுத்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்க முடிவாகியுள்ளது.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்களின் வருகைக்கான போக்குவரத்து ஏற்பாடுகள், அவர்களின் விடுதி வசதிகள், உணவு விநியோகம் மற்றும் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக பேரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

வெளிமாவட்ட மற்றும் குடாநாட்டு மாணவர்கள் சுதந்திரமான தடைகள் இன்றி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியான சூழலை உருவாக்குவதற்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு நிலைமை குறித்து காங்கேசனில் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.31

குடாநாட்டில் தற்போதுள்ள நிலைமை குறித்து உயர்மட்டச் சந்திப்பு ஒன்று நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறையில் இடம் பெற்றது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடந்த இச்சந்திப்பில் அரச அதிகாரிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மக்களின் உடனடித் தேவைகள், உணவு நிலைமைகள் உட்படப் பல விடயங்கள் இச்சந்திப்பில் ஆராயப்பட்டன.

ஏற்கனவே இடம்பெற்ற சந்திப்புக்களில் எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் உள்ள தடங்கல்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக அறியவந்தது. (அ-1)

## கருணா குழு-விடுதலைப் புலிகள் வடமுனைக் காட்டில் மோதல்!

### தமக்குத் தொடர்பில்லை என்கிறது இராணுவம்

மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமுனைக் காட்டுப் பகுதியில் படுவான்கரையை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு கருணா குழு ஊடுருவித் தாக்குதல் நடத்த முனைந்தனர் என்றும் அத்தாக்குதலை முறியடித்து அவர்களைத் தாம் சுற்றிவளைத்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினரும் சேர்ந்து நடத்திய இந்தத் தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவரை பிடித்ததாகவும் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளதாகவும் புலிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் கடமையாற்றும் எமது சக உத்தியோகத்தர் திருமதி இரட்ணேஸ்வரி குகனேசன் அவர்களின் புத்திரன்

**செல்வன் குகனேசன் கேமராஜ்**

(யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை)

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு பாராட்டுவதோடு, மேன்மேலும் பரீட்சைகளில் சித்தியடைந்து பல சிறப்புக்களைப்பெற வாழ்த்துகின்றோம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், தலைமையலுவலக சக உத்தியோகத்தர், ஊழியர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 "இல் பரீட்சைக்குத் தோற்றிய

**செல்வி அனோஜா**

161 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 51 ஆவது இடத்தையும் பாடசாலை மட்டத்தில் உயர் புள்ளி பெற்றமையையுமிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவருடன் தோற்றி சித்தியெய்திய 22 மாணவர்களையும் இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

உறவினர்.

## பிரத்தியேக வகுப்பு

## இணைந்த கணிதம் - 2009

**ஆரம்பம்: 03.01.2007 புதன்கிழமை பி.ப. 3.00 மணி**

**இடம்:** 442, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் : திரு. சு. இலட்சுமணன்**

(அநுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி ரஜனி கந்தசாமி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் காசிப்பிள்ளை கந்தசாமி**

அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து நாமும் துயருற்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், வலிகாமம் மேற்கு, சங்கானை. (65381)

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 . 04 . 1923



உதிர்வு 04 . 01 . 2004

**அமரர் வெள்ளையர் கந்தையா**

திதி: 31.12.2006

காலத்தால் கரையாத உம் நினைவுகளிற்கு கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

மல்லாகம். (65350) குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளில் 31 ஆம் நாள்

திருமதி

**நேசமணி நாகராஜா**



மனம் மகிழ 26-03-1932 மனம் நெகிழ 01-12-2006

*அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து பண்புடன் வாழ்ந்த எம் உயிர் அம்மாவே! நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றுமே நிழலாடும்.*

*எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று( 31.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

74/15, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (65092)

பிரிவால் துயருறும்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராஜா விமலாதேவி தம்பதியரின் புதல்வி

**செல்வி கிந்துஜா**

(யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தி.)

தரம் ஐந்து 2006 புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவது டன், அவருக்கு ஊக்கமளித்து வழிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் உளம்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தல்லையப்பற்று சனசமூக நிலையம், புங்குடுதீவு - 12.

(65375)

## காணி விற்பனைக்கு

சரசாலை கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில் சுன்னாகம் - சாவகச்சேரி வீதியில் நன்னீர்க்கிணற்றுடன் கூடிய 20 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு ஏற்றது. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு : இ.கங்கா மெளலீசன், (அச்செழு அமெரிக்கன் மிஷன் பாடசாலை முன்னால்), அச்செழு, நீர்வேலி.

## வீடு விற்பனைக்கு

இராசாவின் தோட்ட வீதியில் 2½ பரப்புக் காணி யில், பொஸ்கோ பாடசாலை, CONVENT மற்றும் கோயில்கள் என்பனவற்றிற்கு அண்மித்ததாக, சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : இல. 49, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

## கார் விற்பனைக்கு

MARUTHI ZUZUKI-800 கார் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு கொள்ள : இல. 49, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

## உடன் விற்பனைக்கு

C.D/Casste Player, T.V-Stand, மேசைகள், மின் விசிறிகள், Settee- set, Plastic - plants, Parm, Walker, டோபர் மன் பின்சர் ஆண் நாய் (8மாதம்), பெண் 2 வருடம், நாய் கூடு, Weight Set, Dressing Table என்பன உடன் விற்பனைக்குண்டு.

ஷேன் மென் அக்குபன்ச்சர் வைத்தியசாலை, பிள்ளையார் வீதி, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

## சிக்குன் குனியா இலவச மருத்துவ முகாம்

மேற்படி இலவச மருத்துவ முகாம், இன்று அவரங்கால் மத்தி முன்பள்ளி நிலையத்தில் மு.ப 10.30 மணிமுதல் பி.ப 2மணிவரை இடம்பெறும். இதில் லயன் Dr.S.இராசலிங்கம் தலைமையில் பிரதேச வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு இனம் காணும் நோயாளிகட்கு இலசவ மருந்து வகைகள் விஷேசமாக வழங்கப்படவுள்ளன. அனைவரும் கலந்து நன்மை பெறுக.

**அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம்.**

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் மீனாச்சி

பத்மநாதன் மீனாச்சி 30.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - பத்மினி தம்பதியரின் மூத்த மகளும் தெய்வேந்திரனின் (வடமராட்சி கல்வி வலயம்) அன்புத் தாயும் பாருபதி, பொன்னையா (அதிபர், யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் இரகுவர்மன், அகல்யா, அனுசியா, அனுரதன் ஆகியோரின் அன்புப் போர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்திற்கு தகனக்கிரியைக் காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்: ப.தெய்வேந்திரன் (மகன்).

### காமராசர் பல்கலைக்கழக பட்டப் பரீட்சைகள்

யாழ்ப்பாணத்தில் கமாராசர் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் முதுமாணி (M.A),விஞ்ஞான முதுமணி (M.Sc.),வர்த்தக மாணி(B.Com) இறுதிப் பரீட்சைகள் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம் பித்து நடைபெற்று வருகின்றன.

இந்தப் பரீட்சைகள் யாழ். புதிய உயர் கலைக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்று வருவதாக அதன் பணிப்பாளரும் காமராசர் பல்கலைக்கழக இணைப்பாளருமான அருள்நங்கை சண்முகநாதன் தெரிவித்தார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2006**



செல்வி

**கீர்த்திகா ஓம் முருகையா**

138 புள்ளி, அச்சுவேலி மத்திய கல்லூரி.



செல்வி

**கீர்த்தனா மதிவண்ணன்**

157 புள்ளி, நெல்லியடி மெதடிஸ் மிசன் த.க.பாடசாலை.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்புள்ளிகள் பெற்று சித்தியடைந்த செல்வி கீர்த்திகா ஓம் முருகையா, செல்வி கீர்த்தனா மதிவண்ணன் ஆகியோரை பாராட்டுவதோடு; அவர்கள் எதிர்காலத்திலும் பரீட்சைகளில் உயர் சித்தியடைந்து சாதனை படைத்து கல்வி கேள்விகளில் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

"அன்ன பவனம்", சந்நிதி வீதி, கதிரிப்பாய், அச்சுவேலி.

சு.நடராசா ஐயா குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா ஞானாம்பிகை

யாழ்ப்பாணம், கலட்டி, சீனியர் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா ஞானாம்பிகை நேற்று(30.12.2006)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசிர் கந்தையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று(31.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (65384)

தகவல்: க.தங்கராசா (மகன்) (சந்திரன்- லண்டன்).

### திருமதி இராஜநாதன் தெய்வானை



ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பொந்தி லேன், பண்டத்தரிப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராஜநாதன் தெய்வானை 29.12.2006 அன்று காலமானார்.

அன்னார் அமரர் கதிரவேலு மற்றும் நீலம்மாவின் சிரேஷ்ட புத்திரியும் திருவேங்கடம் இராஜநாதன் (ஓய்யுபெற்ற விலை மதிப்பீட்டு ஊழியர்) அன்பு மனைவியும் தபேசன் (சாரதி), தவதரன் (ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி), திலீபன், தனுசா ஆகியோரின் அன்புத் தாயும் விநாயகமூர்த்தி (லண்டன்), புஸ்பவதி, கனகம்மா (கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினேஸ்வரி, நாகராஜா (C.T.B), நல்லதம்பி( (M.P.C.S.கொடிகாமம்), தில்லைநாதன், பஞ்சநாதன், அமரர் பரமநாதன் ஆகியோரின் மைத்துனியும் கர்சன், காஞ்சனா, ஜனனி, தாரணி, அபிராமி, கிருஷ்ணா, கண்ணா, கஜானி, புவிதினி ஆகியோரின் பெரிய தாயும் சிவநேசன், சிவரூபன், ஜமுனா, செல்வன், சுரேஸ், ஜனா, காந்தன் ஆகியோரின் சிறியதாயும் கிதாசினி, நிரஞ்சினி, சயிலஜா, சாருகா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(31.12.2006)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொந்தி லேன், பண்டத்தரிப்பு. (65384)

தகவல்: கணவர், பிள்ளைகள்.

### மயில்வாகனம் மகேஸ்வரி



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 30/13, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேஸ்வரி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மகளும் ஜீவானந்தம், இராசையா (மயிலு)(அமரர்) சிவசுப்பிரமணியம் (சிவா-பிரான்ஸ்), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்றவரான தனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் நாகபூஷணி, வசந்தினி, பிரியா (பிரான்ஸ்), கனகராசா, கருணாரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(31.12.2006)ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணியளவில் இறுதிக்கிரியைகளுக்காகசெம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30/13, மூத்தவிநாயகர் வீதி, 2ஆம் ஒழுங்கை, நல்லூர். (65384)

தகவல்: சு.மயில்வாகனம் (கணவர்).

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் நாகரெட்ணம் (முத்தம்மா)

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அத்தியடி புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் முத்தம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணரின் மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் தில்லைவனம் அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, அன்னம்மா, ஐயம்பிள்ளை மற்றும் சோமசுந்தரம், பரமேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசையா அப்பாக்குட்டி மற்றும் குணம், செல்லம்மா, கனகசபை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் அவரின் பெறாமகளான புஷ்பராஜா கமலாம்பினையின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று(31.12.2006)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி கமலா புஷ்பராசா, 45, அத்தியடி புதிய வீதி, யாழ்ப்பாணம். (65383)

தகவல்: அ.சோமசுந்தரம், அ.சுந்தரலிங்கம் (மயூரா அன்பளிப்பகம்), திருமதி கமலா புஷ்பராசா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அவலங்களுக்குள் நசியும்

# சமூக ஆத்மாவை காக்கும்

# ஆனந்தனின் படைப்பாற்றல்

*கடலம்மா - உன் கருணை எங்கே போனது அம்மா....*
*கடல் போல பெருமனது*
*கதைகள் எங்கே தொலைந்தது அம்மா ....*
*கடலம்மா...*
*எங்க்ள் கண்ணீரே கடலானது அம்மா.....*



ஆழிப்பேரலை பெருந்துயரம் எழுதப்பட்டு ஆண்டுகள் இரண்டு முடிந்தன. தொடரும் மனித அவலங்களுக்கு மட்டும் முடிவில்லை. மனித இருப்பும், மனிதம் மீதான நம்பிக்கையும் கேள்விக்குறியான ஒரு ஆளுமையில் மீண்டும் துளிர்க்கும் ஒரு மன எழுச்சியாய் ஒரு பெரும் கலைப்படைப்பின் தரிசனம் எங்கள் மண்ணில் விளைந்திருக்கிறது.

எழுதமுடியா துயரத்தின் மொழியாய், பேசமுடியாத மக்களின் குரலாய் சிற்பக்கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் தளமாய் ஆழிப்பேரலை அனர்த்தங்களின் சித்திரிப்பு வாய்த்திருக்கிறது. ஒரே மரத்தில் விரிகின்ற காட்சிகளிடை நாடளாவிய நிலையில் நிகழ்ந்த அனர்த்தங்கள் உயிர்த்துவமாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நாடறிந்த கலைஞரான ஆனந்தனின் சமூக மனத்துடிப்பாய் ஏற்கனவே அவரது கலைப்படைப்புகளை கண்டிருக்கின்றோம். எங்கள் மக்களின் துயர்பாடுகளை, உயிர்ப்பு வல்லமைகளை அவரது கலையாக்கங்கள் வரலாற்றுப் பதிவுகளாக்கியுள்ளன. இந்த வகையில் காலம் அவருக்குள் எழுதிய அற்புதமாய், பக்குவமாய் அவருக்குள் விளைந்ததுதான் இந்தப் பிரமாண்டமான கலைத்தரிசனம்.

ஒரு சமூகப் பணியாளனாக ஆழிப்பேரலை அனர்த்த காலங்களிடை சேவையிலே தன்னை ஈந்த பொழுதுகளிலேயே இந்தக் கலையாக்கம் பற்றிய எண்ணம் அவருக்குள் கருக்கொண்டதனை அறியமுடிகிறது.

ஒரு இனவரைவியலாளனுக்குரிய (Ethnographer) முறையியலோடு வெற்றிலைக்கேணியிலிருந்து தேவேந்திர முனைவரை சுனாமி அனர்த்த காலங்கள் அனைத்தையும் நேரில் கண்டும் கேட்டும் பதிவுகளை மேற்கொண்டு அதற்குப் பின்னால் காட்சிப்படுத்தல்களுக்கான தேர்வுகள் - கோர்வைகளை வரித்துக் கொண்டு கடந்த இரண்டாண்டு கால கலையாக்கப் பயனாய் இந்த சிற்ப வெளிப்பாட்டை எமக்காக்கியிருக்கிறார் ஆனந்தன்.

ஒரு கலைஞனின் தேடல்; அவனது நுண்ணிய பார்வை; பகுப்பாய்வுத்திறன் - இவற்றின் வழியாகவே அவன் படைப்பு வல்லமை. இந்த வகையில் ஆழிப்பேரலை ஆற்றல் வீச்சு முதல், அதன் கோரத் தாண்டவத்தில் மனிதர் கண்ட பேரழிவுகள், பேரழிவுகளிடையேயும் மனிதரை காத்துநின்ற மானுடத்தின் மேன்மைகள் சித்திரிப்புகளாகின்றன. எல்லாமே உண்மைக் கதைகள் தான்.

ஆனாலும் அவை கோர்க்கப்பட்ட வண்ணத்தில், குவிமையமாகத் தேர்ந்த களங்களிடை கலைஞனின் தனித்துவம் பளிச்சிடுகிறது. சுனாமி பற்றிய இதுவரை காணாத பதிவாக ஆனந்தனின் கலைப் படைப்பு வரலாறாகிறது.

எங்கள் புலங்களில் பதிவாக பேணப்படவேண்டிய, போற்றப்படவேண்டிய சம்பவங்கள், சங்கதிகள் நிறையவேயுள்ளன. எதிர்கால பண்பாட்டின் மீளுருவாக்கம் என்பது நிகழ்காலத்து மனங்களின் பண்படுத்தலினும் புத்தாக்கத்திலுமே சாத்தியமாகும். இந்தவகையில் மனி



தப் பேரவலங்களுக்குள் நலிந்து நசியும் ஒரு சமூகத்தின் ஆன்மாவை காத்து நிற்கும் பெரும் பணி ஓர் கலைக்கானது. இந்தக் கால பணியை உணர்ந்த ஆனந்தனுக்கு எங்கள் பின்னரும் கலை வரலாறும் கடமைப்பட்டது.

ஆனந்தனின் சிற்பக்கலை கூடம்; சிற்பக்கலை பயிலும் எங்கள் பிள்ளைகளுக்கான ஆய்வு கூடமாக எதிர்காலத்து எங்கள் பண்பாட்டின் சிற்பக்கலை வளர்ச்சியின் நிலைகளாக வேண்டும். ஆக்கத்திறன் கொண்ட கலைகள் ஒன்றுகூடவும், அவர் ஆக்க கலைகளின் வழி, எங்கள் எதிர்காலத்துக்கான வல்லமைகளை எங்கள் பண்பாடு பெற்றுக்கொள்ளவும் ஆனந்தனின் அயராத ஆற்றலும் உழைப்பும் துணையாக வேண்டும்.

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**

# போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குக

**மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 25 இந்து சங்கங்களின் பிரதிநிதிகள் இந்துமாமன்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.**

பெரும்பாலும் இந்துக்களாக இருக்கும் இந்நாட்டின் தமிழ் மக்கள் - குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள் - அனுபவிக்கும் சொல்லொண்ணாத் துயர் காரணமாக இந்தப் பகிரங்க வேண்டுகோளை விடுக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றம், இந்நாட்டில் இருக்கும் இந்து நிறுவனங்களின் ஒன்றியம். அதன் வருடாந்த கூட்டத்தில் இந்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இன்று (25.12.2006) கொழும்பிற்கு வந்து கூடிய எங்கள் எல்லோரின் சிந்தனைக்கும் வேதனை தரும் பிரச்சினையாக இருந்தது. சமீபகாலமாக நடக்கும் குண்டு, ஷெல் வீச்சுகள் மற்றும் போர் நடவடிக்கைகள், கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல் செயல்கள் எங்கள் மக்களை பயங்கரமான நிலைக்குத் தள்ளியுள்ளன.

யுத்தத்தாலும் பலாத்கார நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்டிருக்கும் எமது சகோதர சகோதரிகளின் நிலை, இப்பாதிப்பின் பலனாக பலர் பட்டினியாலும் மற்றும் வேதனை தரும் முடிவுகளையும் எதிர் நோக்கியுள்ளனர். மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்களின் பேராளர்களில் சிலர் இந்த வருடாந்தக் கூட்டத்தில் போக்குவரத்து பிரச்சினை காரணமாக சமூகமளிக்கவும் முடியவில்லை.

யுத்த நிறுத்தத்தை முழுமையாக அமுல் நடத்தி சகல இராணுவ நடவடிக்கைகள் பலாத்காரச் செயல்களும் நிறுத்தப்பட்டு எமது சகோதர சகோதரிகளின் துயரங்கள் உடனே முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

**இந்து மன்றங்களின் பகிரங்க வேண்டுகோள்**

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் நிலையான என்றும் நிலைக்கும் நியாயமான அரசியற் தீர்வைக் காணக்கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித தாமதமுமின்றி ஆரம்பிக்கப்பட வேண்[illegible]

மனிதாபிமான அ[illegible]யில் மக்களின் வேதனைகள் அணுகப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

யுத்த நிறுத்த நடவடிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். ஏ-9, ஏ-15 பாதைகள் உடன் திறக்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களை தொடர்ந்தும் புறக்கணிக்காது அந்த மக்களுக்கு அவசிமாகத் தேவையான உணவுப்பொருள்கள் மருந்து வகை உட்பட சகலவற்றையும் அனுப்பவும் கல்வி மற்றும் அத்தியாவசிய வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றும் அவற்றை உடன் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகிறோம்.

பாரெல்லாம் பரவியிருக்கும் இந்து நிறுவனங்களையும் இந்து மக்களையும் எமது சகோதர சகோதரிகளின் பிரச்சினைகளில் அக் [illegible] என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# திடீர் மருத்துவ நிலையங்களால் பாமர மக்கள் பாதிப்புறுகின்றார்கள்

**அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?**

ஈழ. மண்ணின் இன்றைய துயரநிலை உலகறிந்த விடயம். கொடிய பட்டினியால் மக்கள் இறந்து கொண்டிருக்கும் தன்சானியா போன்ற நாடுகளை விஞ்சும் அளவிற்கு எமது கண்ணீர்க் காவியம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

உள்ளூரில் பெறக்கூடிய பசளி, முகட்டை போன்ற இலைக்கறி வகைகள் மூலம் கிடைக்கும் போசணைச் சத்து மட்டும்தான் எமது உயிரை உடலுடன் பிணைத்து வைத்திருக்கின்றது.

'சிக்குன் குனியா' காய்ச்சலும் தீவிரமாகப் பரவி வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. அரச மருத்துவமனைகள் காய்ச்சல் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. தனியார் மருந்தகங்களின் கண்ணாடி அலுமாரிகளில் கௌரவமாக இருக்கவேண்டிய 'பனடோல்' குளிகைகள் சுதந்திர வர்த்தக வலயங்களான மரக்கறிச் சந்தைகளுக்கு மாயமான முறையில் பறந்தோடிச் சென்று பழப்புளிக்கும் பாகற்காய்க்கும் நடுவில் நாணத்துடன் கூனிக் குறுகி அமர்ந்து இருக்கின்றன.




எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்போது படலைக்குப் படலை மண்எண்ணெய்க் கடைகள் தோன்றுவதுபோன்று தற்போதைய இக்கட்டான நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி கிராமப் புறங்களில் சந்திக்குச் சந்தி புதிய தனியார் மருத்துவ நிலையங்கள் பல உதயமாகிக் கொண்டிருக்கின்றன. புதிய மருத்துவர்களும் தோன்றுகின்றனர். இவர்களின் சிறப்புத் தகைமைகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

'' பத்து வருடங்களாகப் புண்ணுக்கு மருந்து கட்டியவர்''

'' ஐந்து வருடங்களாக M.B.B.S மருத்துவருக்கு உதவியாளனாக இருந்தவர்''

'' மருந்துக்கடை வைத்திருந்தவர்''

என்றவாறு பொதுவாக மேலைத்தேய மருத்துவ முறையில் பயன்படுத்தப்படும் ஆங்கில மருந்துகள் தாக்குத்திறன் மிக்கவை. எனவே இவை சரியான முறையில் பயன்படுத்தப்படும்போது ஏற்படும் நன்மைகளிலும் பார்க்க தவறான முறையில் பயன்படுத்தப்படும்போது ஏற்படும் தீமைகள் அதிகம் என்பதை மருத்துவ உலகம் நன்கு அறியும்.

ஆனால், தற்காலத்தில் மிகக் கவனமாகப் பயன்படுத்த வேண்டிய '' பென்சுலின்'', ''அம்பிசிலின்'' போன்ற மருந்து வகைகள் இந்தப் புதிய மருத்துவ மனைகளில் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஏற்படும் பக்க விளைவுகளால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள் படிப்பறிவு குறைந்த பாமர மக்களே.

ஒரு தனியார் மருத்துவமனையின் வாயிலில் உள்ள விளம்பரப் பலகையில் மருத்துவரின் பெயர், தொழிற்தகமை, உள்ளூராட்சி சபையில் பதிவு செய்யப்பட்ட இலக்கம் என்பன குறிப்பிடப்படுவது உலக வழமை.

ஆனால், குடாநாட்டின் கிராமப் புறங்களில் உள்ள பெரும்பான்மையான தனியார் மருத்துவமனைகளின் விளம்பரப் பலகையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம், வைத்தியர் ஓய்வு எடுக்கும் நேரம் என்பன மட்டுமே குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

அதாவது மருத்துவரின் தொழிற்தகைமைகள் பெரும்பான்மையான விளம்பரப் பலகைகளில் தணிக்கை செய்யப்பட்டிருக்கும்.

மேற்படி தகவல்கள் விளம்பரப் பலகையில் இருந்தால் மட்டுமே குறிப்பிட்ட வைத்தியர் மேற்கொள்வது மேலைத்தேய மருத்துவ முறையா அல்லது மூலிகைகளைப் பயன்படுத்தும் கீழைத்தேய மருத்துவ முறையா அல்லது இரண்டும் கலந்த கலப்பட மருத்துவ முறையா என்பதை நோயாளிகள் அறியமுடியும்.

உண்மையில் ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தும் போது குறிப்பிட்ட மருந்தின் செறிவு (Concprination), குளிர்ச் சங்கிலி(Coldchain), பக்க விளைவுகள் போன்றவற்றில் கூடுதலான கவனம் செலுத்தப்படுவது மிகவும் அவசியம் ஆகும்.

உதாரணமாக குறிப்பிட்ட ஒரு ஆங்கில மருந்து பல்வேறுபட்ட செறிவுகளில் காணப்படலாம். குறைந்த செறிவுடைய மருந்தைப் பயன்படுத்தி மாற்றக்கூடிய நோய்க்கு கூடுதலான செறிவுடைய மருந்தைப் பயன்படுத்தினால் நோய் மிக விரைவில் குணமடைவதால் மருத்துவருக்குக் '' கெட்டிக்காரன்'' என்ற பட்டம் கிடைத்து வியாபாரம் களை கட்டலாம். ஆனால், ஆபத்தான பக்க விளைவுகள் நோயாளிக்கு பிற்காலத்தில் ஏற்படும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.

'' ஆஸ்த்துமா எனப்படும் தொய்வு வருத்தத்துக்கு றோசாப்பூ நிறக் குளிசை''

'' வயிற்றுளைவு நோய்க்கு செவ்விளநீர் நிறக் குளிசை''

'' நெஞ்சு நோவிற்கு மஞ்சள் நிற மைசூர் பருப்புக் குளிசை''

'' நெருப்புச் சுட்ட புண்ணுக்கு கத்தரிப்பூக் கலர் தண்ணீர்''

போன்ற வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி மருத்துவம் செய்ய முயற்சிப்பது எமது சமூகத்துக்கு ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அத்துடன் மருத்துவ நிலையங்கள் கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகைகளின் நினைவுச் சின்னங்களாக இராது, நோயாளிகளுக்கப் போதுமான காற்றோட்டம், ஒளி வசதிகளுடன் வசதியான மலசலகூடங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

பொறுப்பானவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

**அ.கந்தமனோகரன்,**

**பண்டத்தரிப்பு.**

# மரவள்ளித் துருவல் ரொட்டி தயாரிக்கும் முறை

**தேவையான பொருள்கள்:**

1 கிலோ மரவள்ளி கிழங்கு
100 கிராம் வெங்காயம்
50 கிராம் பச்சை மிளகாய்
தேவையான அளவு உப்பு
2 மேசைக்கரண்டி கோதுமை மா

**செய்முறை**

மரவள்ளிக் கிழங்கை தோல் நீக்கி கழுவிய பின்பு கரட் தேய்க்கும் துருவி மூலம் கிழங்கை துருவி எடுத்தல் வேண்டும். ஒரு பாத்திரத்தினுள் சிறிதாக வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு 2 மேசைக்கரண்டி கோதுமை மா, துருவிய கிழங்கு இவற்றை ஒன்றாகச் சேர்த்து பிசைந்து ஒரு பெரிய தேசிப்பழத்தினை ஒத்த உருண்டைகளாக செய்து அவற்றினை வாழையிலையில் சப்பையாக தட்டி விடவும். தோசைக்கல்லினை அடுப்பில் வைத்து சிறிது தேங்காய் எண்ணெய் தடவி அதில் இந்த ரொட்டியை இரு பக்கங்களும் வேக வைக்கவும். சூட்டுடன் பரிமாறலாம் [illegible]வை காலை உணவாகவும் மாலை சிற்றுண்டியாகவும் சாப்பிடலாம்.

**இராஜேஸ்வரன் கலைச்செல்வி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் செல்வராசா



(உரிமையாளர் -ஹரிஸ் கொமினிகேஷன், மானிப்பாய்)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் செல்வராசா (உரிமையாளர் -ஹரிஸ் கொமினிகேஷன், மானிப் பாய்) நேற்று (30.12.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் உதயகுமார் (டோகா), வசந்தகுமாரி (ஆசிரியை - மாத்தளை), அமரர் சுகுணகுமார், ஜெந்தகுமாரி (ஆசிரியர் - திருகோணமலை), சிவகுமார் (NSB -திருகோணமலை), விஜியகுமாரி (SDO-சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகை, சந்தானம் (வங்கி முகாமையாளர் - மாத்தளை), ஜெயலக்சுமி, ஜசி, நந்தினி, தயாளன் (தயாளன் கொமினிகேஷன் - மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனும் டாவின், கிறிஸ்ரா, ஹரிஸ், சச்சின், கிலன்சின், கயூரிக்கா, பிறின்ஷிகா, ருக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2006) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுதுமலை மேற்கு, மானிப்பாய். (65339) தகவல்: குடும்பத்தினர்.

## சின்னத்துரை நவரத்தினம்



(கிராம வைத்தியர், கோப்பாய் கண்ணகை அம்மன் கோயில் முன்னாள் உபதலைவர்)

கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராயில் வசித்துவருமான சின்னத்துரை நவரத்தினம் 29.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சுவர்ணலீலா (லண்டன்), சற்குணலீலா (சந்திரா), இந்திரலீலா, ஜகுருகவரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யோகேஸ்வரநாதன் (M.P.C.S. நீர்வேலி), உதயகுமார், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற டாக்டர் பொன்னுத்துரையின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசாத்தி (ஆசிரியை) சோமசுந்தரம், தில்லைராசா, பஞ்சலிங்கம், தங்கமணி ஆகியோரின் மைத்துனரும் கௌசி, கிரிஷாந் (Accountant), தர்சிகா, கருணாநிதி, சுமிதா (முன்னாள் கணனி ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி), சுதாகரன், யசிந்தா (தர்காநகர் கல்வியியற் கல்லூரி மாணவி), சுரேஸ்காந், றஜீவ்காந், லோஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெனனியின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்ற ஜெயராசசிங்கம், தனபாலசிங்கம், இராசமணி, ஜெயசுதி, விக்னேஸ்வரன், ஜெயராணி (யாழ். போதனா வைத்தியசாலை), சிவகுமார் ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

V.T.S.லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (65336) தகவல்: திருமதி சந்திரா யோகேஸ்வரன் குடும்பத்தினர்.

## கனகசபை முருகேசு



அச்சுவேலி தெற்கில் வசித்தவரும் இல. 64 1/3, சின்சபா றோட், வெள்ளவத்தையை தற்போதைய முகவரியாகவும் கொண்டவருமான ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள Controller உம், North Ceylon Spun - pipe Company, கிளிநொச்சி நிறுவனத்தின் உரிமையாளருமான கனகசபை முருகேசு 29.12.2006 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஊரெழுவைச் சேர்ந்த அழகரத்தினத்தின் அன்புக் கணவரும் ரஞ்சினி (UK), நிரஞ்சன் (Canada), குலத்தினி பரமகுரு (ஆசிரியை, Hamza Muslim Maha Vidyalayam - Modera), ரவீந்திரன் (UK), நளாயினி (UK), கிருசாந்தினி (UK), ரஜினி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணபதிப்பிள்ளை (Malaysia), மனோன்மணி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64 1/3,சின்சபா றோட், வெள்ளவத்தை. (அ.51722) தகவல்: மனைவி, பிள்ளைகள் தொ.பே. 011 2552814.

## நடராசா அமிர்தம் (பாக்கியம்)

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா அமிர்தம் (பாக்கியம்) 29.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரகலாதன், அருணகிரி மற்றும் இந்திரசேனன் (ஜேர்மனி), புனிதவதி (இந்தியா), பரஞ்சோதி (கனடா), அகலிகை (லண்டன்), ஊர்வசி (கனடா), அருணகிரிநாதன் (பிரான்ஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் அம்பிகாவதி, கிருஷ்ணவேணி, இரத்தினகுமாரன், புனிதவதி, சுதானந்தன், அன்ரன்ராஜ், ரஞ்சினி, ஜெயக்குமரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, பொன்னம்மா, பொன்னம்பலம், சோமசுந்தரம், சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆசிரிமுத்து, தம்பிஐயா, சிவசம்பு, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.12.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(65337) தகவல்: க.நடராசா (கணவர்).

## கிள்ளை விடு தூது நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.31

நாவற்குழி 'அகவெளி மன்றம் நடத்தும் கவிஞர் செல்லையா குமாரசுவாமியின் "கிள்ளைவிடு தூது" நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவற்குழி ப.நோ.கூ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொ. சுப்பையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பி. முத்துலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (203)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியர்
இ. இராமச்சந்திரன் அவர்களின்
அன்பு மனைவி
திருமதி ஜெகதீஸ்வரி இராமச்சந்திரன்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரது ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வனஜா சிவானந்தன் அவர்களின்
தந்தை
வல்லிபுரம் சிங்கராசா
அவர்கள் 29.12.2006 காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம், யா/ மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஞ்சலிங்கம் சரஸ்வதி

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் லண்டனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங்கம் சரஸ்வதி 28.12.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காந்திகேசு, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இன்பராசா (லண்டன்), இன்பராணி (லண்டன்), இன்பவதி (லண்டன்), சிவஞானவதி (லண்டன்), கேதீஸ்வரநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் கனகநாயகம் (லண்டன்), இரத்தினவேல் (லண்டன்), ராஜ்லுங்கன் (லண்டன்), Dr.வதனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வி, சுதன், அனா, விபூஷணன், ஆரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13, Cran Brook Drive ES HER Surry KT109AD U.K. Tel: 44-208-3982127

தகவல்: Lion கா.சற்குணதேவன் குடும்பம், செ.சிவசுப்பிரமணியம் குடும்பம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

## காசிப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற Co-Operative Inspector)



தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 40, குறுக்குத்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட (ஓய்வுபெற்ற Co-Operative Inspector) காசிப்பிள்ளை கந்தசாமி நேற்று (30.12.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற மலேயன் தபால் அதிபர் காசிப்பிள்ளை - தங்கம்மாவின் சிரேஷ்ட புதல்வனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் ரஜனி (கலாசார உத்தியோகத்தர், சங்கானை, முன்னாள் லங்கா சிமெந்து லிமிடெட் Tech Doc-Asst.) ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற சிவஞானத்தின் சகோதரனும் ஜெயவதனாவின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40, குறுக்குத் தெரு நல்லூர். தகவல்: மனைவி, மகள்.

MODERN EDUCATION CENTRE - பருத்தித்துறை
SCIENCE CENTRE - கரவெட்டி
2006 O/L பரீட்சையின் தோற்றிய மாணவர்களுக்கான
Spoken English With Grammar
Lectured by : Mr. K. Nishanthan
ஆரம்பம்: 01.01.2007 [திங்கள்]
பருத்தித்துறையில் - 9.00 a.m.
கரவெட்டியில் - 10.00 a.m. (சி/51720)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளைப் பெற்று (வவுனியா மாவட்டத்தின் முதலாம் நிலை) சித்தியடைந்த கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த கேசவன் குருக்கள் - சுபத்திராதேவி தம்பதியரின் புதல்வன்

செல்வன் கே. சுதர்சன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரை பயிற்றுவித்த வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

17, விதானையார் வீதி, கொழும்புத்துறை மேற்கு. (62199) அப்பப்பா, பெரியப்பா, சித்தப்பா குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



உதயம் 04 - 06 - 1946
மறைவு 02 - 12 - 2006

அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணானந்தன்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் - நெல்லியடி)

பாசத்தின் திருவுருவே
பார்புகழும் ஓர் உருவே
நேசத்தின் குணக்குன்றே
நேரிய குணமுடையாய்
அறுபது வயதோடு உன்சேவை
போது மென்று உன்குலதெய்வம்
வீரபத்திரர் தன்னடியில் உனை அழைத்து
நேரே சிவலோகம் சேர்த்துவிட்டார்.

உங்களை என்றும் நினைவு கூரும்:
குரும்பைகட்டி, புலோலி. (சி/51711) சி.பாலசுந்தரலிங்கமும் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) பிள்ளைகளும்.

## நன்றி நவில்லும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 04 - 06 - 1946
உதிர்வு 02 - 12 - 2006

அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணானந்தன்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் - நெல்லியடி)

எங்கள் குலதெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் வைத்தும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், பலவித உதவிகள் நல்கியும், எங்கள் துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் குரும்பசிட்டி வைரவர் ஆலய முன்றிலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பசட்டி, புலோலி. (சி/51719) - குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு



மண்ணகம் 29 - 03 - 1922
விண்ணகம் 01 - 12 - 2006

திருமதி சின்னையா ஆச்சிப்பிள்ளை

மண்ணகத்தில் எம்மையீன்றோம்
விண்ணகத்திற்கு எம்தந்தையிடம்
சென்றுவிட்ட தாயே
நின் ஆத்மா சாந்தி பெற
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி சின்னையா ஆச்சிப்பிள்ளை அவர்கள் சிவபதம் எய்திய 31ஆம் நாள் நினைவுகூரலும் ஆராதனையும் மதியபோசனமும் அன்னாரது இல்லத்தில் இன்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.இந்நிகழ்வில் உறவினர்கள், நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நி.மு.:கைதடி நாவற்குழி.
த.மு.:கைதடிதெற்கு.
கைதடி.

தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிக்குன் குனியா' பரவாமல் தடுத்துக் கொள்ள நுளம்பு ஒழிப்பு செயற்பாடு தொடரவேண்டும்

சிக்குன்குனியா என்ற வைரஸ் காய்ச்சல் யாழ். குடாநாட்டில் அண்மைக்காலத்தில் வெகு விரைவாகப் பரவி மக்களை - வயது வித்தியாசமின்றி தாக்கி அல்லோலகல்லோலப்படுத்தியுள்ளது. இந்நோயும் இதன் சாயலைக்கொண்ட ஆனால, இன்னும் ஆபத்தான டெங்கு காய்ச்சலும் நுளம்புகளினாலேயே பரப்பப்படுவதால் இந்த நுளம்புகளின் பரம்பலை கட்டுப்படுத்தி ஒழித்துக்கட்டுவது அவசியம். இதில் அதிகாரிகளும் பொதுமக்களும் இணைந்து செயற்படவேண்டும். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது இக்கட்டுரை.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளை உலுக்கிய ஒருவகைக் காய்ச்சலால் பாதிப்புற்ற சிலரின் குருதி மாதிரிகளின் பரிசோதனை முடிவுகள் இவர்கள் சிக்குன் குனியா நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டிருந்ததைக் காட்டுகின்றன. இதன் அடிப்படையில் பரவிவரும் இக்காய்ச்சல் சிக்குன் குனியா என்றே கருதப்பட்டு நோயின அறிகுறிகளின் அடிப்படையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

சிக்குன் குனியா இந்திய உபகண்டத்திற்கு புதியதன்று. இது முதன்முதலாக 1953ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் இனங்காணப்பட்டாலும் இந்தியாவில் 1963ஆம் ஆண்டிலேயே அறியப்பட்டது. இலங்கையில் 1965 - 66ஆம் ஆண்டு காலப்பகுதியில் டெங்கு நோயினை ஒத்த காய்ச்சல் கொழும்பை அண்டிய பகுதிகளில் பரவியதும் பின்னர் அது சிக்குன் குனியா என இனங்காணப்பட்டதாகவும் அறியவருகின்றது.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் - சிக்குன் குனியா நோயின் அறிகுறி டெங்கு காய்ச்சலை ஒத்ததாகும். எனவே, நோயாளிகள் சரியாக இனங்காணப்பட்டு தகுந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுதல் மிகமிக முக்கியமானதாகும். ஏனெனில் டெங்கு நோய் சிக்குன் குனியாவை விட ஆபத்தானதும், இறப்பை ஏற்படுத்தக்கூடியதொன்றாக இருப்பதுடன் கடந்த சில ஆண்டுகளாக யாழ். குடாநாடு டெங்கு நோயின் தாக்கத்திற்குட்பட்டிருந்தமையையும் நினைவுகூரத்தக்கது.

### நோயை இனங்காணலின் அவசியம்

டெங்கு, சிக்குன்குனியா ஆகிய நோய்களுக்கான அனேக அறிகுறிகள் பொதுவாக இருப்பதனால் நோயாளர்கள் தகுந்த முறையில் இனங்காணப்படுதல் அவசியமாகும். அண்மைக்காலமாக ஆயிரக்கணக்கானவர்கள் காய்ச்சலின் தாக்கத்திற்கு உட்பட்டபோதும் எத்தனைபேர் உரிய முறையில் இனங் காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார்கள். என்பது பற்றிய சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்கப் பெறவில்லை. எமக்குக் கிடைத்த தகவலின் படி கணிசமான தொகையினர் தனியார் மருத்துவமனைகளிலேயே சிகிச்சை பெற்றதை அறிய முடிகின்றது. இது தவிர குடும்ப வைத்தியர்கள் மற்றும் உறவினர்கள் போன்றவர்களின் ஆலோசனையுடன் தாமாகவே சிகிச்சை பெற்றுள்ளனர்.

சிக்குன் குனியா நோயை இங்கு இனங்காணும் ஆய்வுகூட வசதிகள் இல்லாத நிலையிலும், டெங்கு நோயின் தாக்கம் குடாநாட்டில் காணப்பட்டதன் பின்னணியிலும், இங்கு இந்நோய்களை இனங்காணப்படக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகும். இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட சிக்குன் குனியா நோயின் தாக்கத்தின்போது குறிப்பிட்ட எண்ணிக்கையான நோயாளிகள் சிக்குன் குனியா மற்றும் டெங்கு நோய்களின் தாக்கத்திற்கு ஒரே நேரத்தில் உட்பட்டிருந்தமையை இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

பொதுவாக உயிராபத்து அற்றதெனக் கருதப்படும் சிக்குன் குனியா விரைவாகப் பரவிவரும் சந்தர்ப்பத்தில் கவனம் முழுவதும் இந்நோயின்மீதே. இருக்கையில் உயிராபத்து ஏற்படக்கூடிய டெங்குநோய் இனங்காணப்படாது மறைக்கப்படலாம். இதுவே இங்குள்ள ஆபத்தாகும். எனவே, நோயின் முறையான இனங்காணலும் தகுந்த சிகிச்சையும் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

### காவிகள்

டெங்கு, சிக்குன் குனியா நோய்களை ஏற்படுத்தும் வைரசுக்கள் ஈடிஸ் இன *(Aedes aegypti, Ae. albopictus)* நுளம்புகளினால் பரப்பப்படுகின்றன. இவ் இரு வகை நுளம்புகளும் யாழ். நகரை அண்டிய பிரதேசங்களில் அதிகளவில் வியாபித்திருப்பதை எமது ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.


கலாநிதி எஸ்.என்.சுரேந்திரன்,
எஸ்.கண்ணதாசன், பி.ஜே.யூட், ஏ.கஜதீபன்
விலங்கியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.


அதாவது ஆண்டு பூராகவும் இவை வியாபித்திருப்பதும், மழைவீழ்ச்சியை தொடர்ந்து அவற்றின் பெருக்கம் அதிகரித் திருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. மழைவீழ்ச்சியை தொடர்ந்தே இந் நோயின தாககம் அதிகரித்தமை அனைவரும் அறிந்ததே. அதேவேளை மழைவீழ்ச்சியை தொடர்ந்துவரும் வெப்பநிலை கூடிய நாள்கள் முக்கியமானவை ஏனெனில் வெப்பநிலை உயர்வானது நுளம்புகளினால் சிக்குன்குனியா வைரசுகள் காவப்படும் தன்மையை அதிகரிப்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

### நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தல்

நுளம்புகளினால் காவப்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்குரிய முறையில் நோயாளர்கள் இனங்காணப்பட்டு தகுந்த சிகிச்சையை வழங்கும் அதேவேளை, நோயின் பரம்பலை கட்டுப்படுத்த காவி இனங்கள் இனங்காணப்பட்டு தகுந்த முறையில காவிக் கட்டுப்பாட்டு முறைகள் அமுல்படுத்தப்படவேண்டும். நன்கு திட்டமிடப்பட்டு, காவிகளின் பரம்பல் தொடர்பான தரவுகள் பெறப்பட்டு மக்களோடு இணைக்கப்பட்ட காவிக்கட்டுப்பாட்டு முறை உருவாக்கப்பட்டு அது தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக எல்லாக் காவிக்கட்டுப்பாட்டு முறைகளும் நோயின் தாக்கம் குறைந்ததும் மறைந்து போகின்றன. இதற்கு ஒரு நல்ல உதாரணம், இந்தியாவில் சிக்குன்குனியாவின் தாக்கம் இறுதியாக 1973 ஆம் ஆண்டில் உணரப்பட்டது. பின்னர் இதன் தாக்கம் இல்லாத போது சிக்குன் குனியா இந்தியாவிலிருந்து மறைந்துவிட்டதென பலரும் கருதினர். ஆனால், சிக்குன் குனியாவின் தாக்கத்தை இந்தியா மீண்டும் அண்மையில் உணர்ந்தது. தகுந்த முறையில் காவிக்கட்டுப்பாட்டு முறைகள் தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்படாமை சிக்குன் குனியாவின் மீள் தாக்கத்திற்குரிய காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

எனவே, மேலும் ஒரு சிக்குன் குனியா அல்லது டெங்கு நோயின் தாக்கத்தை யாழ். குடாநாடு உணர முன்னர் சுகாதார அதிகாரிகள் துரிதமாகச் செயற்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறை, விவசாய முறைகள், நீர் முகாமைத்துவம் என்பன காவிகளின் பெருக்கத்துடன் தொடர்புடையன. இவற்றுடன் தொடர்பான அம்சங்களை தொடர்புபடுத்தி சுகாதார அதிகாரிகள் பொருத்தமான காவிக்கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்தப்படுவது வரலாற்றுத் தேவையாகும். இல்லையெனில் மீண்டும் ஒரு சிக்குன் குனியா அல்லது டெங்கு நோயின் திடீர் தாக்கத்தை - பரம்பலை (Outbreak) வரலாறு விரைவாக - பதித்துக் கொள்ளும். ✱


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவனும் குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் தற்போது மருதடி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய

**பாலகிருஷ்ணன் பிரசாந்**

அவர்கள் 2006 ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். அவர் மேலும் கல்வியில் சிறந்து வளமோடு வாழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

2/2, மருதடி, யாழ்ப்பாணம். (65182)
பாலகிருஷ்ணன் விஜயசிறி (அம்மா), சித்திமார், மாமா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இணுவில் மத்திய கல்லூரி மாணவன்

**செல்வன் சிறிகரன் யதீசன்**

அவர்களை மனம்மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க தாவடி அம்பலவாண வேத விநாயகரை வேண்டுகின்றோம்.

ஸ்ரீகுமுதம், தாவடி வடக்கு. (65172)
வாழ்த்துபவர்கள்: பெரியப்பா - ம.கெங்காதரன், பெரியம்மா, அக்கா - ஸ்ரீசனா

## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்



2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கிருபாநந்தம் - சுபாஜினி தம்பதியரின் அருந்தவப் புதல்வன்

**கார்த்திக்**

(அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

இவர் இன்னும் பல சித்திகளைப் பெற்று நலமோடு வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
வாழ்த்துபவர்கள் குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவன்

**சிவதாசன் தனுராஜ்**

அவர்கள் தரம் 5 புலமைப் பரீட்சையில் 158 புள்ளிகளை பாடசாலை மட்டத்தில் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அவரை அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள், உறவினர்கள் வாழ்த்துகிறார்கள்.

கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.
குடும்பத்தினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனும் சங்கானை பிரபாகரன் - றஜீனா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**பிரவிந்த்**

2006ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு (மாவட்ட நிலை -17) அவரை மனதார பாராட்டுவதோடு மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆனந்தமலர், அல்வாய்.
அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஈச்சமோட்டையைச் சேர்ந்த விஜயகுமார் சுவிதா தம்பதியரின் புதல்வன்

**செல்வன் விதுஷன்**

(யாழ். புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் சித்தியடைந்தமையால், இவரை வாழ்த்திப் பாராட்டுவதோடு, இவர் கல்வி கற்ற பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

42, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
பேரன், பேத்தி.

## தேவை

எம்.இராஜநாயகம் & கோ

பட்டயக் கணக்காளர்கள், கணக்காளர்கள், கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை.

இன்று [31.12.2006] ஞாயிற்றுக்கிழமை நேரில் வரவும்.

தொடர்பு : 140, பலாலி வீதி, (பரமேஸ்வரர் சந்தி), பெற்றோல் செற் முன்பாக, திருநெல்வேலி. T.P: 2222478

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கண்ணதாசன் - சொரூபா தம்பதியரின் புதல்வன்

**க.கௌதம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரைப் பயிற்றுவித்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

இல. 8, கற்குள ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம்.
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, அத்தம்மா, அத்தான், அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தம்பிமார், தங்கை, அண்ணா, அக்கா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளை (மாவட்ட நிலை 09) பெற்று சித்தியடைந்த

**செல்வன் முதலித்தம்பி சிந்துஷன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரைப் பயிற்றுவித்த யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (65191) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவன்

**மகேந்திரன் சோபிகாந்**

2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்றுச்சித்தியடைந்துள்ளார். இவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மில்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (65388)
பெற்றோர், நண்பர்கள், குமார் மாமா, குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தி யோகத்தராகக் கடமை புரியும் மார்க்கண்டு மல்லிகா அவர்களின் அன்புத் தாயார் காலமானதையிட்டு, துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.



## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இலட்சுமிப்பிள்ளை துரைச்சாமி

(இளைப்பாறிய ஆசிரியை)

எங்கள் அன்புருவிற்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காளி அம்பாளை இறைஞ்சுகின்றோம். அவரின் திடீர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவையூர் இளைஞர்கள்.

## நெல்சன் சாரதிப்பயிற்சிப் பாடசாலை

அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் மீண்டும் 29.12.2006 முதல் ஆரம்பமாகியுள்ளன.

சகலவிதமான வாகனங்களுக்கும் சிறந்தமுறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொ.பே.: 0777 942312.

'நெல்சன் லேணர்ஸ்'
இல. 109, Y.M.C.A.கட்டடம்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



ஈழத்து இசைநாடகத் துறையின்
பிரபல கலைஞரும்
எமது மன்றத்தின் இசைநாடகப்பிரிவின்
உருவாக்கத்திற்கு ஊக்கம் தந்தவருமான
**வடிவேலு செல்வரத்தினம்**
(நடிககலாமணி வ. செல்வம்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆறாத் துயரடைந்தோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (65250) - திருமறைக் கலாமன்றம்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் இலட்சுமிகாந்தன்



அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இலட்சுமிகாந்தன் 27.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (Rtd. Station Master) - திருச்செல்வம் தம்பதியரின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லிங்கேஸ்வரன், குனேஸ்வன், சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேந்திரனின் அன்பு மாமனும் கரிகரனின் அன்பு பேரனும் இராசரத்தினம் (இந்தியா), சிவமணி, இலகுநாதன், சிகாமணி, புஸ்பமணி, மகேஸ்வரநாதன், காலஞ்சென்ற புவனநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மண்டலேஸ்வரன் (நீர்கொழும்பு), புவனேஸ்வரி (நீர்கொழும்பு), விக்கினேஸ்வரன் (லண்டன்), பரமேஸ்வரி (நீர்கொழும்பு), ராஜேஸ்வரி (கொழும்பு), வசந்தராணி (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.12.2006 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கென்னடிலேன்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (65213)

தகவல்:
நகுலேஸ்வரி (மனைவி),
மகேஸ்வரநாதன் (சகோதரன்).

### திருமதி துரைச்சாமி இலட்சுமிப்பிள்ளை



(இளைப்பாறிய ஆசிரியை, யா/ உடுவில் அமெரிக்கன் மிசன் த.க.பாடசாலை)

உடுவிலைச் சேர்ந்த துரைச்சாமி இலட்சுமிப்பிள்ளை (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சபாபதி - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சபாபதி துரைச்சாமியின் (இளைப்பாறிய முகாரி, நீர்வேலி காமாட்சியம்பாள் ஐக்கிய கூட்டுறவு கைத்தொழில் சங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி நகுலேஸ்வரி நடராஜாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புச் சகோதரியும் சபாபதி கந்தசாமி (கொழும்பு), காலஞ்சென்ற சி.நடராஜா (ஓவசியர்) ஆகியோரின் மைத்துனியும் திருமதி இரத்தினேஸ்வரியின் (கொழும்பு) சகலியும், சத்தியதேவி (லண்டன்), மோகன் (பாகநேன்), சுலோஜனா (ஆசிரியை, யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), துஷ்யந்தி (ஆசிரியை, மு/ பாலிநகர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜகோபாலன் (லண்டன்), கௌரி (டென்மார்க்), அருந்தவராசா (தொழில்நுட்பவியலாளர், பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் மாமியும் வாசுகி (லண்டன்), கீர்த்திகன் (டென்மார்க்), யதுஷன் (மாணவன், யா/ உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் வடக்கு,
சுன்னாகம். (65304)

தகவல்:
ச.துரைச்சாமி (கணவர்),
ச. அருந்தவராசா (மருமகன்).

## பிருந்தா மில்ஸ்

எமது நிறுவனத்தில் பின்வரும் சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

1) அரைக்கும் ஆலை
 1. ஈர அரிசி திரித்து வறுத்தும் கொடுக்கப்படும்.
 2. அனைத்து வகையான அரையல் வேலைகள்
2) சுத்திகரிப்பு நிலையம்
 1. மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு 250/-

மில் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ்,
இல.18, நங்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 9201.

## திருவாசகத்தேன்

658 பாடல்களும் அடங்கியது ரூ. 225/-
திருவாசக முற்றோதலுக்கு உகந்த நூல்
(கழிவு உண்டு)
வெளியீடு:
சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்,
291, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

## விற்பனைக்கு

DIO HONDA (ஸ்கூட்டி பெப் மாதிரி) பெண்களுக்கான Moter Bick, Made in Japan விற்பனைக்கு.150, ஸ்ரான்லி தெரு, யாழ்ப்பாணம்.222 2052

## விற்பனைக்கு

இல.QA XXXX தொடர் இலக்க முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.
021 226 3395
021 226 4107
வல்வெட்டித்துறை.

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹபிடல் லேனில் மிகவும் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் விற்பனைக்குண்டு. Air Condition இணைப்புகளும் உயர்தர Architect இனால் கட்டப்பட்ட 02 Bed Room, 03 Bed Room வீடுகள் உள்ளன. உடனே குடி புகலாம். விலை 50 இலட்சத்திலிருந்து.
தொடர்புகளுக்கு:
0777 271222.

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501

## விற்பனைக்கு

தள்ளுகேற் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 693A/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 021 222 8245.

## பாடசாலை சேவை

நவாலி, மானிப்பாய், கதுமலை, தாவடி, பொற்பதி, கொக்குவில் ஊடாக யாழ். நகர் பாடசாலைகளுக்கு [பிறிட்டன், பொஸ்கோ, கண்டுக்குழி, சென்.ஜோன்ஸ்]. சேவையில் ஈடுபடும் எமக்கு மாணவர்கள் தேவைப்படுகின்றார்கள். [தரம் 1, தரம் 2] எமது சேவையில் இருக்கைக்கு அளவாகவே மாணவர்களை ஏற்றிச்செல்லப்படுவர்.
தொடர்பு: செ. சுஜிதரன் (சூட்டி)
அரசடி, நவாலி. தொ.பே.: 021 4591015.

## பிற்போடப்பட்டுள்ளது

01.01.2007 அன்று நடைபெறவிருந்த திருமதி சண்முகம் சரோஜினிதேவியின் 39ஆவது நாள் நினைவும் வீட்டுக்கிருத்தியமும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.
தகவல்:
சண்முகம் சிவகுமார் (மகன்).

## சுயமுன்னேற்ற நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.31

பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிறுவனத்தின் வடபிராந்திய இளைஞர் சபையின் ஏற்பாட்டில் இன்று ஞாயிறுக்கிழமை காலை 9 மணியளவில் சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவன் சத்தியசாயி சேவா நிலையத்தில் சுய முன்னேற்ற நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் பஜனை உட்பட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (202)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 17 |
| ★ | ★ |
| 03 | 11 |
| ★ | ★ |
| 1976 | 2006 |

அமரர் தேவராஜா மனோராஜ் [மனோ]

*அப்பா என்றழைக்க நீங்கள் இல்லை!*
*உங்கள் முகம் இனி எப்போது காண்போம்!*
உங்கள் நினைவுகளுடன் வாழும்:

தல்லையபுலம், கரவெட்டி. (65219) மனைவி, மகள், அப்பா, அம்மா.


SCC இன் கணனிப்பயிற்சி நெறிகள் ஆரம்பம் 07,10.01.2007

Special Offer 3000/-

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000/= கற்க, ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 months |
| DIPLOMA IN VISUAL BASIC | 4 months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | 3 months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 months |

Softview Computer College
No.55, Arasady Rd, Jaffna, 021-2225170
scclanka@hotmail.com



UNIVERSITY of CAMBRIDGE
TEACHING KNOWLEDGE TEST (TKT)



What is TKT?
TKT is a new test about teaching English. It aims to increase teachers' confidence and enhance job prospects by focusing on the core teaching knowledge needed by teachers of primary, secondary or adult learners, anywhere in the world. This flexible and affordable award will help you to understand:

- different methodologies for teaching
- the 'Language of teaching' - the 4 skills, grammar, vocabulary
- the key aspects of lesson planning and use of resources
- classroom management methods for different needs

Who is TKT for?
It is ideal for all teachers, whatever your background and teaching experience, and is also suitable for people who would like to reach English but do not yet have a teaching position.

ஆங்கில ஆசிரியராக வர விரும்புபவர்கள், ஆங்கிலத் தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிபவர்கள், ஆங்கில ஆசிரியர் பயிற்சிகளை மேற்கொண்டிருப்பவர் எவராயினும் ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற Cambridge University யின் TKT சான்றிதழைப் பெற அரிய சந்தர்ப்பம் மேலதிக விபரங்களை எமது College இல் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய வகுப்புக்கள் 05.01.2007 இல் ஆரம்பமாகின்றன.
BRITISH COLLEGE OF ENGLISH
141, Adiyapatham Road, Thirunelvely



புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (SriLanka)
Foundation level, Intermediate level & Final
Exam :- Jan 2006 ஆரம்பம்:- 06-01-2007 (Saturday)
Medium :- English & Tamil
வார நாள் வகுப்புக்கள் , வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன
Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464 , Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.


## V.K.இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 27.12.2006இல் இருந்து 1C, ஸ்ரான்லி வீதியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

V.K.இராசரத்தினம்,
1C. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ நதியா நகை மாளிகைக்கு அருகில்)

குறிப்பு: ... T.V றேடியோக்கள் திருத்துவதற்காக ஒப்படைத்தவர்கள் 7.1.2006இற்கு முன் வந்து திரும்பப்பெற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## புதுவருடத்தில் கல்விச் செயற்பாடுகள்

புதிய வருடத்தில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதலாவது தவணைக்காகப் பாடசாலைகள் நாடு முழுவதிலும் ஆரம்பமாகின்றன. ஏனைய நாள்களை விட புதிய வருடத்தின் முதல் நாள் மாணவர்களால் விசேடமாகக் கொள்ளப்படுகிறது. சாதாரண பாடசாலை நாள்களை விட அதற்கு விசேட கணிப்பும் சிறப்பும் உண்டு. அதனைப் புத்தூக்கம் நிறைந்த நாளாக மாணவர்கள் மட்டுமன்றிப் பெற்றோர்களும், ஏன் ஆசிரியர்களும் கூடக் கருதுவது வழமை.

இயல்புநிலை பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பாடசாலைகள் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளன. கழிந்துசெல்லும் வருடத்தில் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தன. இது பெற்றோர்களுக்கும் எதிர்காலப் பிரசைகளின் வள்ர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட சகல தரப்பினர்களுக்கும் மனக்கனத்தையும் விரக்தியையும் தந்தது.

கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற மூதுரையை முழுக்க முழுக்க கடைப்பிடிக்கும் வகையில் யாழ்ப்பாண மக்கள் அதனைத் தமது கண்களில் ஒன்றாக மதித்து வருபவர்கள். அதனால் பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வமே அவர்களது முதன்மைச் சொத்தாக விளங்குகின்றது.

கல்வியின் பெறுமதியை நீண்ட பல காலங்களுக்கு முன்னரே, எமது மூதாதையர்கள் உணர்ந்து கொண்டதால், யாழ்ப்பாணத்தவருக்கு என்று ஒரு கல்விப் பாரம்பரியம் சிறப்புத் தன்மையுடன் விளங்கியது.

எந்த இடரின் மத்தியிலும், தமது பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டி அதனைத் தங்கள் பிள்ளைகளுக்கு முதுசொத்தாகச் சேர்த்துவிடும் வாழ்வியல் எமது மண்ணில் வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருகிறது.

தமிழ் மக்களின் - மிகக் குறிப்பாக குடாநாட்டு மக்களின் - கல்விச் செல்வத்தை அழிக்கவும் பறிக்கவும் கடந்த பல வருடங்களாக இந்நாட்டு அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் சதித் திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி மழுங்கடித்து வருவது ஒன்றும் புதிய கதை அல்ல. அது நீண்ட பட்டியலில் வரிசைப்படுத்தக்கூடியது.

தமிழர்களின் கல்வி வளர்ச்சியை வெட்டி வீழ்த்தி அவர்களைக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பாகுபாடுகள், புறக்கணிப்புகள், ஒடுக்குமுறைகள் பலப்பல. காலத்துக்குக் காலம் அவை வெவ்வேறு வடிவங்களில் வந்து தாக்கின.

இருபது வருடப் போர்க்காலத்திற்குள்ளும் அமிழ்ந்து, அமிழ்ந்து எழுந்தேனும் யாழ்ப்பாணம் தனது கல்விச்செல்வத்தை கணிசமான அளவிலேனும் ஏந்திப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

கல்விச் செயற்பாடுகளுக்கான வசதிகள், வாய்ப்புகள் புறச்சூழ்நிலைகள் பாதகமாக அமையும் போது, அது மாணவர்கள் கல்வி பெறுவதில் உள்ள ஆர்வத்தைக் கெடுத்து விரக்தி நிலைக்குத் தள்ளுவது இயல்பு.

ஆகையால், பிறக்கும் புதிய ஆண்டிலாவது தமது பிள்ளைகள் இடர்கள், நெருக்கடிகள், நெருக்கீடுகள் இன்றிப் பயில்வதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதே பெற்றோர்களின் எதிர்பார்ப்பாகும். அப்போதுதான் தமக்குரிய கல்வி கற்கும் உரிமையை மாணவர்கள் அனுபவித்து முன்னேற்றம் காணலாம்.

பாடசாலைக் கல்வி நாள்களை இழந்து கல்வி மீதான நாட்டமும் ஆர்வமும் குன்றிப் போவதற்கு இடங்கொடாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்கள், அதிகாரிகளுக்கும் உண்டு. மாணவர்களும் தமது கல்வி பொன்னானது, கழிந்தால் கிடையாது என்பதனை உணர்ந்து அதனைப் பெற்று வளர்ச்சி காண்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது மிக [illegible] அவசியம்.

அதேவேளை, கல்விச் செயற்பாடுகள் இடையூறின்றி இடம்பெறுவதற்கு உகந்த புறச்சூழலை உருவாக்க உதவுவது அரசாங்கத்தினது கடமையாகும். வெளிமாவட்டங்களில் உள்ளது போன்று மாணவர்கள் சுதந்திரமாக, அச்ச உணர்வு இன்றித் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு அக்கறையுடன் ஊக்கமளிக்க வேண்டும் என்பதே யாழ்ப்பாண மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# செயலகம் நிர்ணயிக்கும் காலப் பகுதிக்குள் விநியோகங்களை பூர்த்திசெய்யவேண்டும்

## அரச அதிபர் ப.நோ.கூ.சங்கத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.31

ஒவ்வொரு கட்ட விநியோகத்திற்காகவும் வழங்கப்படுகின்ற பொருள்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விநியோகிக்கப்படவேண்டும் எனவும் களஞ்சியங்களில் எந்தப் பொருள்களையும் வைத்திருக்கவேண்டாம் எனவும் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

6ஆம், 7ஆம் கட்டங்களுக்கான உணவுப் பொருள் விநியோகம், சில்லறை மற்றும் நானாவித பொருள்கள் விநியோகம் ஆகியன தொடர்பான குறைபாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்திலேயே அரச அதிபர் மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

மக்களுக்கான அத்தியாவசிய பொருள்கள் விநியோகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் திருப்தியானதாக இருக்கவேண்டும் எனவும் சில சங்கங்களின் செயற்பாடுகளில் திருப்தியற்ற நிலை காணப்படுவதாகவும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார். அவற்றை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளரைக் கேட்டுக்கொண்டார்.

நிவாரணப் பட்டியல்கள் உரிய நேரத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு ஒப்படைத்தல், கிளைகளுக்கான பொருள் விநியோகம், கிளைகள் திறந்திருக்கும் நேரம், கிளைக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பு, பொருள்களின் நிறை ஆகியன தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. (1-8)

## ஈழத்துச் சிதம்பரத்தில் செவ்வாய் பஞ்சரதபவனி; ஆருத்ரா தரிசனம்

காரைநகர்,டிசெ.31

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி திருவாதிரை உற்சவ பஞ்சரத பவனி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5 மணி முதல் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, திருவெம்பாவை ஓதல் என்பன இடம்பெற்று தொடர்ந்து பஞ்சரதபவனி இடம்பெறும்.

அன்று இரவு 2 மணி தொடக்கம் நடேசர் அபிஷேகமும் மறுநாள் அதிகாலை 5 மணிக்கு ஆருத்ரா தரிசனமும் பிற்பகல் 3 மணிக்கு திருஊஞ்சல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

இந்த உற்சவத்தை முன்னிட்டு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்குத் தேவையான அனைத்து ஒழுங்கமைப்புக்களையும் மேற்கொண்டுள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6 மணி முதல் தொடர்ந்து ஈழத்துச் சிதம்பரம் வரை 782, 785, 786 இலக்க பாதைகள் ஊடாக பஸ்கள் மாலை 4.30 மணிவரை சேவையில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (1-73)

## கடத்தல், காணாமற்போதல் குடாநாட்டில் அதிகரிப்பு

### கடந்த வாரத்தில் மட்டும் 15 பேர் குறித்து தகவல் இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.31

அண்மைக்காலங்களில் குடாநாட்டில் கடத்தல் மற்றும் காணாமற்போகும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமையன்று தந்தையும் மகனும் காணாமற்போயுள்ளதாக உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்திரலிங்கம் விஜயகுமார் (வயது32 ), அவரது மகனான விஜயகுமார் பிரசாந் (வயது 13), ஆகிய இருவரும் வீட்டிலிருந்து கடந்த வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கொடிகாமம் சந்தைக்குச் சென்றதாகவும் பின்னர் இருவரும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அவர்களது உறவினர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை -

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த இராசு சஞ்சீவன்(வயது 19) என்பவர் கடந்த 27ஆம் திகதி புதன்கிழமையன்று கடைக்குச் செல்லும்போது காணாமற்போயுள்ளதாக அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் 15 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமற்போயுள்ளனர் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (1-79)

## கரவெட்டி நலன்புரி நிலையங்களில் தீ விபத்து ஏற்படும் அபாயநிலை

### பிளாஸ்ரிக் கூடாரங்கள் காரணமாம்

யாழ்ப்பாணம், டிசெ.31

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கென கரவெட்டிப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் பிளாஸ்ரிக் கூடாரங்களுக்குள் வைத்து மக்கள் சமையல் செய்வதால் தீ விபத்து ஏற்படக்கூடிய அபாயநிலை உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இதனைச் சம்பந்தப்பட்டோரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக தென்மராட்சியின் சில பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கரவெட்டிப் பகுதியில் 6 நலன்புரி நிலையங்களில் 158 பிளாஸ்ரிக் கூடாரங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தக் கூடாரங்களின் சுவர்ப்பகுதியும் பிளாஸ்ரிக் விரிப்பினால் மூடப்பட்டுள்ளது. இந்தக் கூடாரங்களுக்குள் வைத்து மக்கள் சமையல் செய்து வருகின்றனர். இதனால் பிளாஸ்ரிக் விரிப்புகள் தீப்பற்றும் ஆபத்து ,உள்ளது.

இது தொடர்பாக யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். இதனை ஏற்றுக்கொண்ட அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரி குறித்த நலன்புரி நிலையங்களில் மக்கள் பாதுகாப்பாகச் சமையல் செய்வதற்கான மாற்று ஒழுங்குகளை விரைவில் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூட்டத்தில் தெரிவித்தார். (8)

**நாளை**

மார்கழி 17
திங்கட்கிழமை
01.01.2007
திதி : திரயோதசி
முன்னிரவு 9.59
நட்சத்திரம் : ரோகிணி
முன்னிரவு 10.54
[illegible]
[illegible]

## கியூமெடிக்கா நிவாரண உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.31

கியூமெடிக்கா நிறுவன அனுசரணையுடன் மானிப்பாய் அசெம்பிளி ஒவ் கோட் தேவசபை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கவென இதுவரை 3 ஆயிரம் 500 குடும்பங்களை பதிவு செய்துள்ளது.

இனிமேல் இப்பதிவு இடம்பெறாது என்பதால் மக்கள் வீணாக அலைய வேண்டாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (203)

## மெமோறியல் மாணவருக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.31

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தரம் 9 இற்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் திருமதி வி.சண்முகரத்தினம் கேட்டுள்ளார்.

புதிய கல்வியாண்டுச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (203)

## பாடநூல்களின் விநியோகம் ஆரம்பம்

குருநகர்,டிசெ.30

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கென கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இலவச பாடநூல்களின் விநியோகம் தற்போது இடம்பெற்றுவருகின்றது.

மேலும் ஒரு தொகுதி நூல்களைக் கப்பல் மூலம் எடுத்துவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயத்தினர் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டுக்குரிய இலவச பாட நூல்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. யாழ்., நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளுக்குத் தேவையான நூல்களை அங்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

தரம் 10 இற்கான தமிழ்மொழி மூல நூல்கள் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (1-51-88)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்ப்பாணம், நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்தில் திருவெம்பாவை கால திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை திங்கட்கிழமையன்று காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது. (1-79)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.31

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (1)

## மணிவாசகர் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சொற்பொழிவுகள், திருமுறை ஓதுதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயணிகளின் கஷ்டங்கள்; பிரதி அமைச்சர் கேட்டறிந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.31

குடாநாட்டுக்கான சிவில் விமான சேவைகளை அதிகரிப்பது, பயணிகள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்குவது ஆகியன குறித்து துறைமுகக் கப்பல் சேவைகள் மற்றும் விமான சேவைப் பிரதி அமைச்சர் துமிந்த திஸநாயக்க ஆராய்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதி அமைச்சரும் அவரது அதிகாரிகளும் கட்டுவன் சோதனை நிலையத்திற்கு சென்று சிவில் பயணிகளின் பயணம் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

யாழ்.சிவில் விமான சேவைகள் அலுவலகங்களின் முகாமையாளர்களுடன் விசேட சந்திப்பு ஒன்றையும் காங்கேசன்துறையில் அவர் நடத்தினார். சிவில் விமான சேவையை விரிவுபடுத்துவது குறித்து அவர் ஆராய்ந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் விஜயம் செய்த அவர் அங்கு அதிகாரிகளுடன் துறைமுக அபிவிருத்தி குறித்து ஆராய்ந்தார்.

கட்டுவன் சோதனை நிலையத்திற்கு அருகில் பயணிகள் தங்கிச் செல்வதற்காக நிறுவப்பட்டுள்ள விசேட தரிப்பிடம் குறித்தும் அவர் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (அ-1)

# ஈ.பி.டி.பியின் பெயரைக் கூறிக்கொண்டு கப்பலுக்குப் பணம் அறவிடுவதாக முறைப்பாடு

## தகவல் தருமாறு கோருகிறது அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

குடநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குக் கப்பல் மூலம் பயணம் செய்பவர்களிடம் எவரேனும் தமது அமைப்பின் பெயரைக் கூறி முறைகேடான வழியில் பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் அது குறித்து அறிவிக்குமாறு ஈ.பி.டி.பி கோரியுள்ளது.

அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டில் இருந்து கப்பல் மூலம் பிற மாவட்டங்களுக்கான பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளிடம் இருந்து முறைகேடான வகையில் சில மாற்று அமைப்புக்களைச் சேர்ந்த நபர்களால் பணம் அறவிடப்பட்டு வருவதாக பொது மக்களிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் எமது யாழ்.மாவட்டப் பணிமனைக்குக் கிடைத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மெற்கொள்ளவுள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.

அத்துடன் மேற்படி முறைகேடான வகையில் பணம் அறவிடப்படும் நடவடிக்கைகளில் எமது கட்சியைச் சார்ந்தவர்களுக்கு எவ்வித தொடர்புகளும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்வதோடு அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் இருந்தால் உடனே எமது பொறுப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

பொது மக்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதே எமது கட்சியின் கொள்கையாகும். எனவே இவ்வித துஷ்பிரயோகங்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

இந்த நிலையில் எமது கட்சியின் பெயரைக் கூறி எவரேனும் முறைகேடான வழிகளில் பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் உடனடியாக அறிவிக்கும்படி பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

# பலாலி, கோப்பாய் கலாசாலைகளின் இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம்

அச்சுவேலி, டிசெ.31

பலாலி-கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மூன்று இடங்களிலும் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளின் பயிற்சி ஆசிரியர்களுக்கு கடந்த செப்ரெம்பரில் நடைபெறவிருந்த இறுதிப்பரீட்சை, ஆண்டிறுதிப்பரீட்சை ஆகியன அசாதாரண சூழ்நிலையால் நடைபெறவில்லை.

மேற்படி பரீட்சைகளை பயிற்சி ஆசிரியர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மூன்று இடங்களிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு செய்துள்ளது.

பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், அடுத்த வாரம் பரீட்சைகள் நேர அட்டவணை, அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்டவர்களை பரீட்சைக்குத் தயாராகுமாறு ஆசிரியர் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் கே.முகமதுநம்பி அறிவித்துள்ளார்.

# ஊடகவியலாளர் சுதந்திரத்தை மதிக்க கோருகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ. 31

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசு ஊடகச் சுதந்திரத்தை அடக்க முற்படக்கூடாது. ஊடகவியலாளர்களின் எழுத்துச் சுதந்திரத்தையும், அவர்களின் உயிர்களையும் பாதுகாக்க அரசு இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற ஊடகச் சுதந்திர மீறல் மற்றும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுகின்றமை போன்றவை சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அவப் பெயரை ஏற்படுத்தித் தந்துள்ளது என்றும், இதனையிட்டு நாம் வெட்கப்படுகிறோம் என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கருத்துக் கூறுகையில் -

பயங்ரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி வியாழக்கிழமை 'சன்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்கவைக் கைது செய்ய அரசு நடவடிக்கை எடுத்ததென்றும் இதை அறிந்து அப்பத்திரிகை அலுவலகத்திற்கு முன்பாக ஊடகவியலாளர்கள் திரண்டதால் அரசின் அம்முயற்சி கைவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது- என்றார்.

## சதாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கயிறு மாட்டப்பட்டது. அவர் நின்ற தளக் கதவு திறக்கப்பட்டதும் சதாமின் கழுத்தை தூக்குக்கயிறு இறுக்கியதும் அவரின் உயிர் பிரிந்ததாகக் கூறுப்படுகின்றது.

தூக்குத்தண்டனை நிகழ்வு ஒலி, ஒளிப் பதிவுசெய்யப்பட்டன. இந்த ஒலி, ஒளிப் பதிவுகள் விரைவில் வெளியிடப்படும் எனவும் ஈராக்கிய தகவல்கள் தெரிவித்தன. தூக்கில் இடப்படும் வரை சதாம் ஹுசைன் அமெரிக்கப் படைகளின் பாதுகாப்பில் இருந்துள்ளார். அவரை ஈராக்கிய படைகளிடம் ஒப்படைக்க அமெரிக்கப் படைகள் இணங்கவில்லை.

சதாமிற்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதும் ஈராக்கில் வன்முறைகள் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்படட்டதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

### ஜனநாயக பயணத்தில் மைல்கல் என்கிறார் புஷ்

சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டமை ஈராக்கிய ஜனநாயகத்திற்கான பயணத்தில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்தார். சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டாலும் ஈராக்கில் வன்முறைகள் முற்றுப்பெறமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

சதாமின் உடலை ஜேர்மனியில் அடக்கம் செய்வதற்கான வாய்ப்பைப்பெற்றுத் தருமாறு சதாமின் புதல்வி ராக் கேட்டுள்ளார்.

தந்தையின் உடலைத் தற்காலிகமாக ஜேர்மனியில் அடக்கம் செய்து ஈராக் சுதந்திர இராச்சியமாக மாறியதன் பின்னர் மீண்டும் அவரது உடலை ஈராக்கில் அடக்கம் செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஈராக்கில் இருந்து நாடுகடத்தப்பட்ட சதாமின் புதல்வி தற்போது ஜோர்தானில் வசித்து வருகின்றார்.

சதாம் ஹுசைனுக்கு எதிரான விசாரணைகள் நீதியான முறையில் விசாரணை செய்யப்படவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-12)

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை கொழும்பு மேலதிக சட்ட வைத்திய அதிகாரி முன் பிரேத பரிசோதனை செய்தபின் உறவினர்களிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கர் குருஜி தெரிவித்திருக்கிறார்.

இலங்கை விடயத்தில் இப்போதுள்ளதை விட கூடுதல் மற்றும் தீவிர பங்காற்றுவதற்கு இந்திய அரசு தாமதித்தால் அதன் விளைவாக அப்பாவிப் பொதுமக்கள் குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்கள் அநியாயமாக அதிக எண்ணிக்கையில் கொன்றொழிக்கப்படும் ஆபத்து உண்டு என்றும் குருஜி கவலை தெரிவித்ததாக அவரது பேச்சாளர் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பாதைக்கு திரும்பவேண்டும் என்று குருஜி கேட்டுக் கொண்டார்.

இலங்கைத் தலைவர்களை அடிக்கடி சந்திக்கும் குருஜி -

கொழும்பு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவும் பரஸ்பர நம்பிக்கைக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு இந்தியா பெரிய அளவில் பங்குவகிக்க முடியும் - என்றும் கூறியதாக அவரின் பேச்சாளர் மேலும் தகவல் தெரிவித்தார். (அ)

## கருணா குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தில் தமது தரப்பில் நால்வர் காயமடைந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை -

தொப்பிக்கல காட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீது நேற்று அதிகாலை பாரிய தாக்குதல் ஒன்றைத் தாம் மேற்கொண்டதாக கருணா குழுவினர் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருணா குழுவின் பேச்சாளர் ஆசாத் மௌலானா கருத்து வெளியிடுகையில் -

நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் எமது ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியும் விசேட கொமாண்டோ படையணியும் இணைந்து புலிகளின் பஞ்சுமரத்தடி இராணுவத் தளத்தின் மீது ஒரு பதிலடித் தாக்குதல் நடத்தின. இதில் 35 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர்; 3 முகாம்கள் முற்றாக நிர்மூலம் செய்யப்பட்டிருக் கின்றன.

புலிகளிடமிருந்து எம்மால் கனரக ஆயுதங்கள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எமது தரப்பில் 2 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

நேற்று மதியம் புலிகளின் பகுதியில் பட்டிருப்பில் உள்ள முன்னணிக் காவலரண் மீது எமது போராளிகள் நடத்திய தாக்குதலில் அவர்கள் தரப்பில் 3பேர் கொல்லப்பட்டதுடன் புலிகளிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள்களும் ரி.56 ரக துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் எமது தரப்பில் 2 பேர் வீரமரணம் அடைந்துள்ளனர் என்றார்.

### முறியடிக்கப்பட்டதாக புலிகள் அறிவிப்பு

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினரின் உதவியுடன் கருணா குழுவினர் மேற்கொண்ட தாக்குதல்கள் தங்களால் முறியடிக்கப்பட்டுவிட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் நேற்றுமுன்தினம் நள்ளிரவு குடுமிமலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் தமது பதில் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட கருணா உறுப்பினர் ஒருவரின் சடலத்தை தாம் கைப்பற்றியதுடன் காயமடைந்த நிலையில் மற்றொருவர் பிடிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் 4 பேர் மட்டுமே காயமடைந்தனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

### இராணுவம் மறுப்பு

அத்துடன் நேற்று நண்பகல் பட்டிருப்பு பாலத்திற்கப்பால் கூட்டெறும்புப் பூச்சி மரத்தடியில் இடம்பெற்ற சம்பவத்தில் தமது தரப்பில் போராளி ஒருவர் உயிரிழந்தார் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கருணா குழுவின் தாக்குதல் சம்பவத்துடன் தம்மைத் தொடர்புபடுத்துவதை இராணுவத்தினர் மறுத்துள்ளனர். (அ-1-12)

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க அருட் சகோதரிகளின் விடுதியும் சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டுவீச்சில் விஜயகுமார் மதிவாணன்(வயது 14), விஜயகுமார் மதிவண்ணன்(வயது 20), ராஜ்குமார் துஷ்யந்தன் (வயது 17), குமார் (வயது 27), பாலசிங்கம் மதிவண்ணன்(வயது 33) ஆகியோர் காயமடைந்தனர். (அ-1)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையினர் அங்கீகாரம் வழங்கினர்.

இது குறித்து பல்கலைக்கழக மூதவை ஏற்கனவே முடிவு எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உரிய, உகந்த சூழலை உருவாக்கிய பின் அடுத்த மாதம் 22ஆம் திகதி பல்கலைக்கழக செயற்பாடுகளை ஆரம்பிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (அ-1-8)

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
A/L 2008
கணித, உயிரியல் பிரிவுகள்
Physics : K.Selvan
ஒலியியல்
Chemistry : S.Vasu
வெப்ப இரசாயனவியல்
Combind Maths
B.Muyuran
வளையி, மூவிசைகளின் சமனிலை
ஆரம்பம் : 31.12.2006 4 p.m.
A/L 2009 ஆரம்பம் : 3 p.m.
நீதம் கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

ENGLISH
Personal Classes
For Gr.9, 10 & O/L Students
* Distinction பெறுபேறு பெறக் கூடிய வகையில்
* Model Papers
* O/L Past Papers
* Clear explanation
* abundant exercises
Contact :- Director, Educare, Adiyapatham Rd. (Near piradeshiya sbba) Thirunelveli.
T.P.: 0776983225, 0776176923

கல்விச் சேவையில் 18 ஆவது ஆண்டில்....
நாவலர் இன்ஸ்ரிரியூட்
தலைமை நிறுவனம்: ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்: பலாலி வீதி, திருநெல்வேலி.
உதயமாகும் 2007ஆம் ஆண்டிற்கான புதிய வகுப்புகள் நாளை (திங்கள்) காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன.
தரம் 1 முதல் O/L, A/L வரை
A/L 2007, 2008, 2009 =>
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
தரம் 1 முதல் O/L வரை =>
சகல பாடங்களும்
தரம் 5 புலமைப் பரிசில் விசேட வகுப்பும்
மாதிரிப் பரீட்சையும் – 2007
SPOKEN ENGLISH
விசேட சிங்கள வகுப்பு
சித்திர வகுப்பு – தரம் 6 முதல் O/L வரை
அனுமதிகள் ஜனவரி 15 வரை வழங்கப்படும்.

CHEMISTRY CLASS
A/L 2009
ஆரம்பம் : 01.01.2007 3.30 p.m
N.KALA
83/19, ARASADY ROAD, JAFFNA.
T.P. : 222 9650

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2009
ஆரம்பம் : 06.01.2007
சனி 10 a.m.
CHE. - அன்பழகன் | Maths - லக்ஷ்மன்
PHY. - விஜயகுமாரன் | சிவகரன்
K.செல்வன் | Bio. - அல்போன்ஸ்
Propritor - Poobalasingum.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org